# வாழ்கையின் நான்கு ஆச்சிரமங்கள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது என இயம்பப்படுகின்றது

இறைவன் இறைவி அம்சமாக வீற்றிருக்கும் தம்பதிகளே திருமணம் சொர்க்கத்திலே நிச்சயக்கப்படுகின்றது என்கிறார் வள்ளுவர் இதன் கருத்து இன்னார்க்கு இன்னார் என்று மேல்லோகத்தில் தீர்மானித்தே பூவுலகிற்கு வருகிறார்கள் என்ற அடிப்படையில் அமைந்ததே. ``அரிது அரிது மானிடர் ஆதல் அரிது அதிலும் கூன் குருடு செவிடு பேடு இன்றிப்பிறத்தல் அரிதே என்கிறார் ஓர் பெண் புலமை அப்படியாக கிடைத்த இந்த மானிடப்பிறவியை சரியான முறையில் பயன்படுத்தி மீண்டும் பூமிக்கு வந்து துன்பப்படாமல் முக்தி அடைவதற்கான வழிகளை வகுத்து கொடுப்பதே இந்து சனாதன தர்மத்தின் அடிப்படையாகும்

இந்து சனாதன தர்மத்தில் மனிதன் கடைத்தேறுவதற்கு நான்கு முதல்நிலைகள் கூறப்படுகின்றன அவை முறையே 01.பிரமச்சார்யம் 02.கிருகஷ்தம் 03.வனப்பிரஸ்தம் 04.சன்னியாசம்

01.இதிலே முதல் நிலை மனிதன் தன் குலகுரு மூலமாகவும் பெரியோர்கள் வழி நின்று தான தர்ம வித்தைகளை படித்து அறிதலாகும். இந்த ஆச்ரமத்திலே மிகவும் நியமத்தோடு ஆச்சார அனுஷ்டான வழிபாடுகளும் குருவின் பாதசேவையும் குருவிற்கு ஹோமத்திற்கு சமித்து போன்ற ஹோமத்திரவியங்களை தேடிக்கொடுத்தல் பிச்சை ஏற்று உண்ணலும் மிக முக்கியமான நியமங்களாகும்.

02.இரண்டாவது ஆச்ரமமாக விளங்கும் இல்லற தர்மம் இது வாழ்க்கையின் அத்திவாரமாகும் இந்த ஆச்சிரமத்திலே முன் கற்றுக்கொண்ட வித்தைகள் வழிபாடுகள் எல்லாவற்றையும் குறைவற நிறைவேற்ற வழி அமைகின்றது அதற்காக நல்லதொரு கன்னிகையை தேர்ந்தெடுத்து அவள் கண்டத்திலே திருமாங்கல்யம் என்று சொல்லக்கூடிய மூன்று முடித்திட்டு இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார்கள் இதிலே இவர்களுக்கு பதினாறு செல்வங்களும் கிடைக்கின்றன மற்றைய ஆச்சிரமத்திலே பதினாறு செல்வங்களையும் பெறுதல் அரிது அதனாலே திருமணத்திற்கு வாழ்த்த வந்த பெரியவர்கள் கூட பதினாறு செல்வமும் பெற்று நீவீர் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துவதே முறையாகும். திருமணமான ஓர் சுமங்கலியின் கண்டத்திலே திருமாங்கலயமும் நெற்றியிலே குங்குமமும் வடுகினிலே குங்குமமும் இருக்கின்ற பரியந்தம் அப்படிப்பட்டவளின் கணவனின் உயிரை எடுப்பதற்கு நானும் அஞ்சுவேன் என்கிறான் ஜமதர்ராஜன் (சாவித்திரி உபதேசத்தில்) ஆகவே இந்த நவீன காலத்தை சற்று திருப்பி ஆராய்வோமேயானால் இவையனைத்தும் தற்போது மாறுபட்டுள்ளது யாதெனில் தங்கத்தாலிக்கொடியின் பாரம் தாங்க முடியாமல் அதை கழட்டி கட்டிலில் வைத்து விடுகின்றனர் குங்குமம் வைத்தால் நெற்றியில் கடி வருமென்று ஒட்டுப்பொட்டு வைக்கின்றனர் அந்த ஒட்டுப்பொட்டும் ஓரளவு சிகப்பாயின் பரவாயில்லை அதுவும் சாறி சட்டைக்கு ஏற்ற வகை யில் கலர் கலராக வைக்கப்படுகின்றது இதனால் விளைவதென்ன?
பெருந்துன்பம் என்றே கூறலாம்.

இற்றைக்கு 100 வருடத்திற்கு முன்பாக நம் கலை கலாச்சாரத்தை திருப்பி பார்ப்போமேயானால் மிகவும் ஒழுங்கான கட்டுப்பாட்டில் இருந்திருக்கின்றனர் ஒரு பெண் பூ முடிப்பதும் பொட்டு வைப்பதும் யாருக்காக? தன் கணவனுக்காகவே அனைத்தும் இருக்க வேண்டுமென நினைத்தாள் அன்றைய பென் ஆனால் இன்று இதற்கு விடைதேடவேண்டியதாக உள்ளது ஆக இதற்கெலாம் காரணம் நாம் நமது மூதாதையர்கள் காட்டிய வழியை புறக்கணித்ததேயாகும்.

இல்லற தர்மத்திலே வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை தெய்வமாக கருதி பாத பூஜை செய்துஅறு சுவை உணவு படைத்து இன்மொழிகள் பல பேசி பக்தி சிரத்தையோடு வாழ்க்கையில் ஓர் நாள் செய்தாலும் பெரும் முக்திக்கு வழியாகும் ஆக இல்லறத்தில் இன்னும் அரிய பெரிய விசயங்களும் தர்மங்களும் பொதிந்திருக்கின்றன.

03.துறவறம் என்று சொல்லக்கூடிய மூன்றாவது நிலை அது இல்லறத்தில் இருந்தே படிப்படியாக ஆரம்பிக்க வேண்டும் பாலோடு கலந்த தண்ணீரில் அன்னப்பறவை தண்ணீரைவிட்டு பாலை மட்டும் அருந்துவது போல் இல்லறத்தில் இருப்பவனும் தன் வாழ்க்கைக்கு தேவையானவற்றை எடுத்துக்கொண்டு தேவையற்றதை துறந்து வாழ்வதே இல்லறத்தில் துறவாகும். பகவத்கீதையிலே கிருஷ்ணரை பார்த்து அர்ச்சுனன் ஓர் கேள்வியை எழுப்புகிறான் அது என்னவெனில் பாகவானே இல்லறத்தில் துறவறமா? அல்லது துறவறத்தில் இல்லறமா? சிறந்ததென வினாவினான் பகவான் பதிலளிக்கையில் இல்லறத்தில் துறவறமே சிறந்ததென்றார் மீண்டும் அர்ச்சுனன் பகவானைப் பார்த்து

பகவானே எனக்கு புரியவில்லை சற்று விளக்கமாக கூறும் என்றான் அர்ச்சுனா கூறுகிறேன் கவனமாக கேள் என்றார் ஒருவன் ஓர் இடத்திற்கு போகவேண்டுமென்றுமுனைகிறான் அந்த இடத்திற்கு போகும் வழியும் அவனுக்கு தெரிகிறது அதற்குரிய வசதியும் வாய்ப்பும் அவனுக்கு நன்றாகவே கிடைத்துள்ளது அவன் எந்தவித சிரமமும் இன்றி தான் போகவேண்டிய இடத்திற்கு போய்ச்சேரலாம்.
மற்றும் ஒருவனோ இவனைப்போல் ஆசைப்படுகிறான் இவனக்கு இருப்பது போல் வசதியும் வாய்ப்பும் அவனுக்கு எட்டவில்லை ஆனால் அவன் பகீரத ப்ரயர்த்தனம் செய்து போகவேண்டிய இடத்திற்கு செல்கிறான்

ஆகவே அர்ச்சுனா இவர் இருவரில் யார்? சிறந்தவர் என்பதை நீயே கூறு என்றார் அதற்கு அர்ச்சுனன் கூறுகிறான் பகவானே சிறியோனாகிய நான் கூறுவது சரியோ பிழையோ முறையோ மன்னித்தருள வேண்டும் பகீரத ப்ரயர்த்தனம் செய்பவனே பல இன்னல்களை கடந்து சோதனைகளை வென்று பகீரத ப்ரயர்த்தனம் செய்து சேரும் இடத்தை சேர்கிறான் அப்படி சேர்பவனே சிறந்தவன் என கருதுகிறேன் கண்ணா என்றான் அதுவே சரியென பகவானும் ஆமோதிக்கின்றார்

04.இப்படியாக மூன்றாவது நிலைக்கு சென்று துறவறநிலையை மேற்கொள்ளும் போது தன்னுடைய புத்திரர்களுக்கெல்லாம் திருமண வைபவங்களை சரிவர நிகழ்த்தி அவர்களிடம் தான் வைத்திருந்த சேர்க்கை சொத்துக்கள் எல்லாவற்றையும் ஒப்புவித்துவிட்டு தானும் தன் மனைவியுமாக ஆரணியம் எய்தலே நான்காவது நிலையாகும் காடேகி மரவுரி தரித்து ரிஷிகளின் சாகவாசம் கொனண்டு அவர்கள் உபதேசப்படி நின்று அஙகே கிடைக்கும் காய் கனி எனபவற்றை உண்டு சதா இறை சிந்தனையுடன் இருந்து சரீரயாத்திரை செய்வதே இந்த நான்கு நிலைகளினுடைய அடிப்படை தத்துவமாகும் இதிலே பூரண மனிததத்துவமும் மீண்டும் பிறவாத பேரின்ப வாழ்வும் முக்தி என்னும் செல்வமும் கிடைக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இந்து சனாதனம் எடுத்துக்கொண்ட முயற்சி போல் வேறெந்த வழிகாட்டிகளும் அமைந்ததாக எமக்குத்தெரியவில்லை அப்படியாகவுள்ள இந்த சிறந்த
இந்து சனாதனதர்மத்தில் நீவிர் நின்று வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

மேலும் திருமணச்சடஙகின் விபரங்களை பற்றி கூறுவோமேயானால் *சப்தஅடி* என்று சொல்லப்படுகின்றது மூன்று முறை *அரசானி வலம்* வருகின்ற நிகழ்வு இப்படி எத்தனையோ விதமான சடங்குகள் நிழ்த்தப்படுகின்றன அனைத்திற்கும் பெரும் தத்துவங்கள் அடங்கிய கதைகளும் உண்டு ஏழடியிலே முதலாவது அடியின் விளக்கத்தை சற்று பார்ப்போமேயாயின் 01) முதலாவது அடியிலே வாழ்க்கையிலே அன்னம் குறைவில்லாமல் வளங்குவதற்கு மஹாவிஷ்னு பின்தொடர்ந்து வருவாரென கூறப்படுகிறது இப்படியே 02) இரண்டாவது அடியில் உடம்பு சுகமாக இருக்கவும் 03)மூன்றாவது அடி விரதங்களை குறைவில்லாமல் நிறைவேற்றுவற்காகவும் 04) நான்காவது அடி உடம்பு புஷ்டியாக இருப்பதற்காகவும் 05) ஐந்தாவது அடி பஞ்சயக்யம் பசு வளர்த்தல் போன்றவைகள் நல்ல முறையில் இருப்பதற்காகவும் 06) ஆறாவது அடி ஆறு ருதுக்களும் அனுகூலமாயிருப்பற்கும் 07) ஏழாவது அடி ஹோம விரதங்கள் குறைவின்றி நிறைவேற்றுவதற்கும் பகவான் பின்தொடர்ந்து வருவாரென சாஷ்திரங்கள் பகர்கின்றன (இதற்கு பெரியவர்கள் வேறு சில கருத்துக்களும் கூறுவதுமுண்டு)

மூன்றடி சுற்றுவது 01) முதலாவது சுற்று கணவனுக்காகவும் 02) இரண்டாவது சுற்று இறைவனுக்காகவும் 03) மூன்றாவது சுற்று ஊர் உலகத்தோடு ஒத்து வாழ்வேன் என சத்யம் செய்து கொள்வதேயாகும் ……